முருகப்பெருமான் துணை

**மகான் சூரியபகவான் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**06.12.2023**, புதன்கிழமை

1. மாதரும ஞானவான்கள் படை
மண்ணுலகம் எங்கிலும் படைக்க
ஆதரவாய் ஞானம் அருளி
அவதாரம் எடுத்த அரங்கனே
2. அரங்கனே உன்பெருமை கூறி
அகிலமதில் சோபகிருது தேள்திங்கள்
வரங்களென இருபான்திகதி புந்திவாரம்
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 20 ம் நாள், 06.12.2023, புதன்கிழமை)
வழங்குவோம் நவகிரக நாயகர்களும்
3. நாயகர்களும் பஞ்சபாண்டவர்களை தொடர்ந்து
ஞான உலகம் அமைய உரைப்போம்
தயவுபட சூரிய பகவான் யானும்
தக்க அறிவுரை ஆசி இதுநாள் உரைப்பேன்
4. உரைக்கவே உயிர் காப்புத் தரும்
உயிர்கொலை நீக்கி அருளும்
மறைபோற்றும் ஞானி அரங்கனே
மண்ணுலகில் சிறந்த ஞானி ஆகும்
5. ஆகவே அரங்கன் கொள்கை
அகிலம் காக்கும்படி இருக்க
வகைபட சூரிய பகவானும்
வரம்தந்து அரங்கன் சேவை
6. சேவை தொடர்பு கொண்டு
சேவகர்களாக உள்ள யாவர்க்கும்
அவனியில் காப்பும் ஆசியும்
ஆற்றல்பட அரங்கன் கரம்பட

7. கரம்பட அருளி வருகின்றேன்
கதிர்வாரம் கண்டு வணங்கி
அறம்தனில் உதவி நிற்பவர்க்கு
ஆதித்தன் என் ஆசி கிட்டும்
8. கிட்டவே ஞான பலமுடன்
குறைவிலா ஆரோக்கிய பலம்
தட்டாமல் அரசவழி ஆதாயம்
தக்க நிலை தேட்டு உத்தியோகம்
9. யோகமான வாழ்க்கை முறை
உயர்வான செயல் திடமென
வகையான அனைத்து வழியிலும்
வல்லமை கூடி சிறப்பர்
10. சிறப்பான ஞானத் தலைமை
சித்திமிகு ஞான ஆட்சியையும்
அறத்தால் வரத்தால் அரங்கன்
அகிலத்தில் படைக்க இருக்க
11. இருக்கவே உலக மக்கள்
இணைந்து அரங்கன் வழி
கருத்தாக தொடர்பை கூட்ட
கலியுகம் ஞானயுகமாக மாறும்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—